MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - I
AUG – 2025 E-ISSN : 2584 – 1238

# வள்ளுவத்தில் மேலாண்மையும் அரசியலும்

**திரு. ஜெ.பாண்டியராஜன்,**
**சுற்றுலா மற்றும் உணவு மேலாண்மைத் துறைத்தலைவர்**
**ஸ்ரீகாளீஸ்வரி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சிவகாசி.**
DOI 10.5281/zenodo.17093396.

**Abstract :**

Thirukkural is one of the noblest literatures of the Tamil language. It shows the way to human morality and progress. It explains the virtues, materialism, pleasure and lust for human life. Thirukkural is the foremost among the moral books in the world language. 'Alum velum pallukkuruthi Nalum udumum sollukuruthi' The greatness of Thirukkural is explained by saying. In such a Thirukkural, we will see what Valluvar has said about management and politics through this research article.

Key Words : Thirukkural - Noblest Literature - Management Studies - Materialism

தமிழ் மொழியின் உன்னதமான இலக்கியங்களில் திருக்குஷறளும் ஒன்று. இது மனித ஒழுக்கத்திற்கும் முன்னேற்றத்திற்கும் வழி காட்டுகிறது. மனிதவாழ்க்கைக்கு அறம், பொருள் , இன்பம்,காமம் ஆகியவற்றைப் பற்றி விளக்குகின்றது. உலக மொழியில் உள்ள அறநூல்களில் முதன்மையானது திருக்குறள்.

**'ஆலும் வேலும் பல்லுக்குறுதி**
**நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி'**

என்று திருக்குறளின் அருமையை விளக்குகிறது. அப்படிப்பட்ட திருக்குறளில் வள்ளுவர் மேலாண்மை, அரசியல் பற்றி கூறியுள்ளதை இவ்வாய்வு கட்டுரை வழி காண்போம்.

**மேலாண்மை**

மேலாண்மை என்பது ஒரு நிர்வாகத்தை எப்படி தனது ஆளுமைக்குள் கட்டுப்படுத்தி அதில் வெற்றி காண்பதாகும். இதனையே நிர்வாகம் திட்டமிடல், ஒழுங்கமைப்பு ஆகியவற்றின் மூலம் தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்கிறது. நிர் வாகத்தில் வரும் இலாபத்தினால் வரும் வரவை அறிந்து செயல்படாவிட்டால் வாழ்க்கை இருப்பது போல் இருந்தாலும் இல்லாது போய்விடும்

**"அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல**
**இல்லாகித் தோன்றாக் கெடும்"** (குறள் 479)

என்று வள்ளுவர் மேலாண்மை பற்றி கூறுவதை அறிய முடிகின்றது.

**வருவாய் அறிந்து செயல்படல்**

நிர்வாகத்தில் வருகின்ற வரவினை கணக்கிட்டால் தான் செலவை தீர்மானித்து இலாபம் பெற முடியும். அது தான் நிர்வாகத்தின் மைக்கல் எனலாம். இதனையே வள்ளுவர்

**"ஆகாறு அளவிட்டி தாயினும் கேடில்லை**
**போகாறு அகலாக்கடை"** (குறள் 478)


http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - I
AUG – 2025 E-ISSN : 2584 – 1238

வருவாயின் அளவு குறைவாக இருந்தாலும் செலவு அதிகமாக கூடாது. வரவுக்கும் செலவுக்கும் பொருத்தம் அவசியம். வரவின் வலிமை தெரிந்து செலவை திட்டமிட வேண்டும். அதாவது நிர்வாக வரவு செலவு எப்படி திட்டமிட வேண்டுமென்று கூறியுள்ளதை அறியமுடிகிறது.

**திட்டமிடல்**

நிர்வாகத்தில் திட்டமிடல் என்பது முக்கியமான ஒன்றாகும். அது தான் எதனை நோக்கி செல்கிறோம் என்பதை தீர்மானிக்கும். சரியான திட்டமிடல் இல்லாவிட்டால் நிர்வாகத் தன்மை சீர் குலைந்துவிடும். அதுமட்டுமல்லாது மேலாண்மையில் ஒரு செயலை செய்யும் போது இழப்பது யாது, பெறுவது யாது, பின் விளையும் ஆதாயம் யாது எனச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டுமென்பதை

**"அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்**
**ஊதியமும் சூழ்ந்து செயல்" (குறள் 461)**

என்று வள்ளுவர் எந்த மாதிரியான தீங்கு வரும் எந்த மாதிரியான நன்மை வரும் இதனால் என்ன ஊதியம் என்பதை ஆராய்ந்து செயல்பட வேண்டும் என்கிறார்.

**திட்டமிடலின் விளைவு**

செயலின் நெறிமுறை அறிந்த வல்லுநர்களோடு ஆராய்ந்து செயல்புரிபவர்க்கு செய்யமுடியாத செயல் ஒன்றுமில்லை .

**"தெரிந்த இனத்தோடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு**
**அரும்பொருள் யாதொன்றும் இல்" (குறள் 462)**

என்று வள்ளுவர் கூறுகிறரர். மேலும் பின் விளையும் ஊதியத்தைக் கருதி இப்போது கையில் உள்ள முதலை இழந்து விடக் காரணமான செயலைச் அறிவுடையோர் மேற்கொள்ளமாட்டார்.

**"ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை**
**ஊக்கார் அறிவுடை யார்" (குறள் 463)**

என்று வள்ளுவர் திட்டமிடும் போது எப்படி செயல் பட வேண்டும் அதன் விளைவு பற்றி கூறியுள்ளதை அறிய முடிகிறது.

**செயலுக்கு முன் திட்டமிடல்**

மேலாண்மையில் ஒரு செயலை செய்வதற்கு முன் அச்செயலை எப்படி செய்ய வேண்டும் என்பதின் வழி அறிந்து செயல்பட வேண்டும். தொடங்கிய பின் எண்ணிக் கொள்ளலாம் என்று நினைக்ககூடாது என்று

**"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்**
**எண்ணுவம் என்பது இழுக்கு" (குறள் 467)**

வள்ளுவர் வலியுறுத்துவதை இக்குறள் வழி அறிய முடிகின்றது. மேலும் அதனை மீறி ஒரு செயலை முடிக்கும் விழி அறியாது தொடங்கினால் பலர் சேர்ந்து துணை செய்தாலும் அச்செயலை முடிக்க இயலாது.

**"ஆற்றின் வருந்தா வருத்தம் பலர் நின்று**
**போற்றினும் பொத்தப் படும்" (குறள் 468)**


http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - I
AUG – 2025 E-ISSN : 2584 – 1238

என்று வள்ளுவர் செயலுக்கு முன் திட்டமிடலின் அவசியத்தை வலியுறுத்துகிறார்.

**மன்னனின் தகுதி**

பல நூற்றாண்டுகளுக்கு முன்பே ஒரு நாட்டை ஆளும் மன்னனுக்கு உரிய தகுதி என்ன என்பதையும், எப்படி ஆட்சி செய்ய வேண்டும் என்பதையும், அவனது கடமைகள் ஆகியவற்றை வகுத்துள்ளனர். அப்படிப்பட்ட அரசியல் பற்றி வள்ளுவர் தன் நூலில் எடுத்தியம்பியுள்ளார். மன்னன் நாட்டை நிர்வகிப்பதில் கல்வியறிவு அவசியம் என்று கூறியுள்ளனர். காலம் தாழ்த்தாமை, கல்வி தரும் அறிவு, மன உறுதி ஆகிய மூன்று பண்புகள் மண்ணாளும் மன்னனுக்கு நீங்காது இருக்க வேண்டும் என்பதை

**" தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்**
**நீங்கா நிலனாள் பவற்கு" (குறள் 383)**

வள்ளுவர் தன் குறளில் மன்னனுக்கு உரிய தகுதியாக கூறியுள்ளார். கல்வி மட்டுமல்லாது மன்னனுக்கு ஈகை, அருள்,செங்கோன்மை, குடிகளைக் காக்கும் அறப்பண்பு ஆகிய நான்கு பண்புகளால் ஓங்கிய அரசன் வேந்தருக்கெல்லாம் விளக்கு ஆவான்.

**"கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்**
**உடையனாம் வேந்தர்க் கொளி" (குறள் 390)**

என்று மன்னனின் மற்ற தகுதிகளையும் குறிப்பிட்டுள்ளார் வள்ளுவர்.

**மன்னனின் பண்பும் பணியும்**

நாட்டை ஆளும் மன்னனுக்கு அஞ்சாமை, அல்லல் நீக்கல், அறம், ஈகை, கடுஞ்சொல் கூறாமை, எளிமை, இடுக்கண் அழியாமை போன்ற பண்புகள் அவசியம். அது மட்டுமல்லாது உலகத்தை அரசன் காப்பான். அவனையோ அவன் பிழையின்றிச் செயல்படுத்தும் நீதி காக்கும் என்று

**"இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை**
**முறைகாக்கும் முட்டாச் செயின்" (குறள் 547)**

வள்ளுவர் மன்னனின் நீதிப் பொறுப்பினை கூறியுள்ளதை அறிய முடிகிறது. மேலும் நீதி கூறுவதில் வேறுபாடு காட்டாது காக்கும் அரசன் மக்களால் இறைவன் என்று போற்றப்படுவான்.

**"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**
**இறையென்று வைக்கப் படும்" (குறள் 388)**

என்று அரசனின் கடமையையும் பணியினையும் வள்ளுவர் கூறியுள்ளார்.

**மன்னனின் கவசங்கள்**

மன்னன் ஆட்சி செய்யும் போது அவனின் கவசங்களாக இருப்பவர்கள் அமைச்சர்கள். அவன் தான் மன்னனுக்கு தக்க சமயத்தில் ஆலோசனை வழங்குபவனாக இருப்பவள். அப்படிப்பட்ட அமைச்சன் பேச்சில் வல்லவனாகவும், நேர்மையுடையவனாகவும் இருக்க வேண்டும்.

**"தெரிதலும் தேர்ந்து செயலும் ஒரு தலையாச்**
**சொல்லலும் வல்லது அமைச்சு" (குறள் 634)**

என்று அமைச்சனின் இயல்பினை வள்ளுவர் எடுத்தியம்பியுள்ளார்.

**தொகுப்புரை**


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - I
AUG – 2025 E-ISSN : 2584 – 1238

இவ்வாறு வள்ளுவரின் ஒவ்வொரு குறளும் மேலாண்மையில் எவ்வாறு செயல்களை திட்டமிட்டு செய்ய வேண்டும், திட்டமிடலின் நன்மை, திட்டமிடாமல் செய்யப்படும் செயலின் விளைவு போன்றவற்றையும், அரசியலில் மன்னின் பண்புகளும், பணிகளும், அமைச்சனின் செயலும் போன்ற அரசியல் சிந்தனைகளும் வள்ளுவத்தில் இடம் பெற்றுள்ளதை இவ்வாய்வு கட்டுரை வழி அறிய முடிகின்றது.

**பார்வை நூல்கள்**

1. தமிழண்ணல், திருவள்ளுவர் அருளிய திருக்குறள்,மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.
2. Harold Koontz and Cyril ‘O’ Donnel, Principles of management.



http://Creativecommons.org//license/by/4.0/.